சுருக்கம்

வேளாண்மை – விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்றுத்துறை – 4 விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் 15 விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு தொலைபேசி மற்றும் இணையதள இணைப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மைத்(வேஉ 2)துறை

அரசாணை(நிலை) எண்.204 நாள்.14.9.2012

படிக்க:

1. விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குநரின் கடித எண்.ஆ2/37691/08, நாள்.23.03.2009, 28.05.2010, 15.07.2010, 12.10.2010, 10.01.2011, 16.09.2011 மற்றும் 13.6.2012
2. அரசு ஆணை எண்.188, வேளாண்மைத்(வேஉ 1)துறை, நாள்.24.10.2011.

****

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குநரின் கருத்துருவில், 2007–ல் மேற்கொள்ளப்பட்ட வேளாண்மைத்துறையின் மறுசீரமைப்பின்படி, கரூர், நாகப்பட்டினம், ராமநாதபுரம், தர்மபுரியில் நான்கு விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகங்களும், கடலூர், சிவகங்கை, கரூர், திருவாரூர், கன்னியாகுமரி, பெரம்பலூர், திண்டுக்கல், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், நாமக்கல், கிருஷ்ணகிரி, தூத்துக்குடி, தர்மபுரி, ராமநாதபுரம் மற்றும் காஞ்சிபுரத்தில் 15 விதைச் சான்று உதவி இயக்குநர் அலுவலகங்களும் துவங்கப்பட்டன என்றும், மேற்காணும் அலுவலகங்கள் அனைத்தும் வேளாண்மை இயக்குநர் / வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களில் இயங்கி வருவதாலும், அரசு விதை சுத்திகரிப்பு நிலையங்கள், விதைச்சான்றுப்பணி தொடர்பாக மேற்படி அலுவலர்களிடம் அடிக்கடி தொடர்பு கொள்ள வேண்டி இருப்பதாலும், அத்துறையின் விதைப் பரிசோதனை முடிவுகளை உடனுக்குடன் மேல் அலுவலகங்களுக்கும் / உரிய நிறுவனங்களுக்கும் / விவசாயிகளுக்கும் தெரிவிப்பதற்கும், பொது மக்களின் அவசியம் கருதியும், தொலைபேசியும், இணையதள இணைப்பும் அவசியம் தேவைப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், அரசு சுற்றறிக்கையின்படி ஒவ்வொரு சார்நிலை அலுவலகத்திற்கும் 3500 இலவச அழைப்புகளுக்கு (Free calls) இரு மாதங்களுக்கு ரூ.4,250/– செலவு செய்திட நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால், தொலைபேசி இணைப்பில் சிக்கனத்தை கடைபிடிக்கும் பொருட்டு, அவ்வியக்ககத்தில் ஒவ்வொரு சார்நிலை அலுவலகத்திற்கும், இரு மாதங்களுக்கான தொலைபேசி செலவினத்தை ரூ.2000/– மட்டும் செலவு செய்திட முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும், ஒவ்வொரு அலுவலகத்திற்கும் தொலைபேசி இணைப்பு பெற (STD வசதியுடன்) ரூ.1250/– தொலைபேசி துறைக்கு (ரூ.500 தவணையில்) செலுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும்

வேளாண்மைத்துறை மறுசீரமைப்பிற்கு முன் இயங்கி வரும் 30 அலுவலகங்களுக்கும் தொலைபேசி மற்றும் இணையதள இணைப்பு தனித்தனியே பெறப்பட்டுள்ளன என்றும், அவற்றின் 2006–07–ஆம் ஆண்டு செலவினம் ரூ.2,19,561/– என்றும் தெரிவித்துள்ளார். எனவே 19 அலுவலகங்களுக்கு புதியதாக தொலைபேசி மற்றும் இணையதள இணைப்பு பெற ரூ.2,28,000/– (ரூ.2,000/-x19x6) தேவை என்று தெரிவித்து, ரூ.2,30,000/– நிதி ஒதுக்கீட்டினை வழங்குமாறு விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குநர் கோரியுள்ளார். மேலும் விதைத் சான்று இயக்குநர் மற்றும் அங்ககச்சான்று இயக்குநர் தனது அறிக்கையில், தரமான விதைகள் உற்பத்திக்கான விதை பரிசோதனை பதிவு விபரங்கள், விதை பரிசோதனை முடிவுகள் ஆகியவை உடனுக்குடன் இணையதள வசதி மூலம், தலைமை அலுவலர்களுக்கிடையே தகவல் தெரிவிக்க வேண்டியது அவசியம் என்றும், அதன்மூலம் உரிய காலத்தில் விவசாயிகளுக்கு சான்று விதைகள் கிடைப்பது உறுதி செய்யப்படும் என்றும், விதை தரக்கட்டுப்பாட்டில் தரமற்ற விதைகளின் விநியோகத்தினை தடுக்க விதை தரக்கட்டுப்பாடு பிரிவுக்கு தெரிவிக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது என்றும் தெரிவித்துள்ளார். தரமற்ற விதை விநியோகத்தை தடுக்க அதிவிரைவு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், இதற்குரிய ஆவணங்கள் மற்றும் பரிசோதனை முடிவுகள் ஆகியவற்றை அனுப்பிட இணையதள வசதி மிகவும் இன்றியமையாததாகிறது என்றும், மேலும், அவ்வியக்ககத்திற்கு தேவைப்படும் அறிக்கைகளை உடன்பெற்று அரசுக்கு ஒட்டுமொத்த அறிக்கை தயார் செய்யவும் இணையதள வசதி மிகவும் இன்றியமையாததாகிறது என்றும், எனவே, தற்போது மத்திய அரசு தொலை தொடர்பு நிறுவனமான (BSNL) நிறுவனத்தின் Broad Band வசதியினை அனைத்து தலைமை அலுவலர்களுக்கும், பொருத்துவதற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் அரசாணை எண்.188, வேளாண்மை (வேஉ1) துறை, நாள் 24.10.2011–ன்படி அக்ரிஸ்நெட் (AGRISNET) என்ற திட்டத்தில் இருந்து எல்காட் நிறுவனத்தின் மூலமாக துறையில் உள்ள விதை ஆய்வு துணை இயக்குநர்–11 (பதினொன்று) மற்றும் விதைப் பரிசோதனை அலுவலர் (விதைப்பரிசோதனை நிலையம்) 7–க்கு மட்டும், இணையதள வசதியுடன் தொலைபேசி வழங்கி, அதிலும் உள் வருகைக்கு மட்டும் தற்சமயம் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், எனவே, மீதமுள்ள 4 விதை ஆய்வு துணை இயக்குநர்கள் மற்றும் 15 விதைச்சான்று உதவி இயக்குநர்களுக்கு புதியதாக தொலைபேசி இணைப்புடன் இணையதள வசதியினையும் சேர்த்து வழங்க அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2) விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, புதிதாக துவக்கப்பட்ட நான்கு விதை ஆய்வு துணை இயக்குநர்கள் மற்றும் 15 விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு தொலைபேசி கட்டணத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்குள் பயன்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் (S.T.D) வசதி இல்லாமல் இன்டர்நெட் இணைப்புடன் கூடிய புதிய தொலைபேசி இணைப்புகளை அளிக்க அனுமதி வழங்கியும் இதற்கான செலவினத்திற்காக ரூ.2,30,000/–ஐ நிதி ஒதுக்கீடு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

3) மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவுத் தொகையினை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் மேற்கொள்ள வேண்டும்.

2435 ஏணைய வேளாண்மை திட்டங்கள், 01 விற்பனை தரக்கட்டுப்பாடு 102 தரம் பிரித்தல், தரக்கட்டுப்பாடு வசதிகள், I திட்டத்தில் சேராதது, AF விதை சான்றளிப்பு, 05 அலுவலக செலவுகள் 01 தொலைபேசி கட்டணங்கள்
(2435 01 102 AF 0513).

4) இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன், அத்துறையின் அ.சா.கு.எண்.51227/நிதித்(வேளாண்மை)துறை/2012, நாள்.10.9.2012—ன்படி, வெளியிடப்படுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலர்

பெறுநர்
விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குநர், கோவை—13,
வேளாண்மை ஆணையர், சென்னை – 5,
கருவூல அலுவலர், கோவை.
மாநிலக் கணக்காயர், சென்னை—18/பெயரில்
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை—8.
நகல்
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை—9
மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை—9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலரின் தனிச்செயலர், சென்னை—9.
நிதித்துறை, சென்னை—9
பொதுத்(தொலைபேசி)துறை, சென்னை—9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்